ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2208/49 - 2021 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2021.01.01

*2208/49 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 21/ 1978* (X) *(அ)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் நுகேகொட, கொஹுவல 10250, சுனேத்ரா தேவி வீதி, இல. 92 இல் அமைந்துள்ளதும்* PV *9729 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச்சென்று அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக பட்டம் அளிக்கும் நிறுவகம் ஒன்றாக றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்டை இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் ஏற்றங்கீகரிக்கின்றேன் ; அப்பட்டத்தின் சுருக்கீடு இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* II *இல் உள்ள நேரொத்த பதிவில் தரப்படுகின்றது.*

***அட்டவணை*** I

*நிபந்தனைகள்*

*1.* றோயல் இன்ஸ்டிடியூட் கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, சர்வதேச பொருளியல் மற்றும் நிதியியலில் வியாபார கௌரவ இளமாணி என தலைப்பிடப்பட்ட கற்கைநெறியை நுகேகொட, கொஹுவல 10250, சுனேத்ரா தேவி வீதி, இல. 92 இல் மட்டும் நடாத்துதல் வேண்டும்.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான குறைந்தபட்ச நுழைவுத் தகைமை-

(அ) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தக பாடத்துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கை நெறியொன்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும்.

3. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்தாவது (05) ஆண்டிலும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பாட மீள் மீளாய்வு ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br><br>பட்டம் | நிரல் II<br><br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| சர்வதேச பொருளியல் மற்றும் நிதியியல் வியாபார கௌரவ இளமாணி | பிபி கௌரவ (சர்வதேச பொருளியல் மற்றும் நிதியியல்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, திசெம்பர் 30.

01-186

---

ச. வ. பி. 21/1978 (X) (அ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் கொழும்பு 06, காலி வீதி, இல. 591 இல் அமைந்துள்ளதும் PV 2268 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான பிஸ்னஸ் மனேஜ்மன்ட் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் இதற்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு இட்டுச்சென்று அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காக பட்டம் அளிக்கும் நிறுவகம் ஒன்றாக பிஸ்னஸ் மனேஜ்மன்ட் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட்டை இக்கட்டளை மூலமும் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் ஏற்றங்கீகரிக்கின்றேன் ; அப்பட்டத்தின் சுருக்கீடு இதற்கான அட்டவணை II இன் நிரல் II இல் உள்ள நேரொத்த பதிவில் தரப்படுகின்றது.

## அட்டவணை I

நிபந்தனைகள்

1. பிஸ்னஸ் மனேஜ்மன்ட் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி என தலைப்பிடப்பட்ட கற்கைநெறியை கொழும்பு 06, காலி வீதி, இல. 591 இல் மட்டும் நடாத்துதல் வேண்டும்.

2. மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான குறைந்தபட்ச நுழைவுத் தகைமை-

   (அ) இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் வர்த்தக பாடத்துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும் ; அல்லது

   (ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கை நெறியொன்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும்.

3. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்தாவது (05) ஆண்டிலும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பாட மீள் மீளாய்வு ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமாணி | பிபிஎம் கௌரவ |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, திசெம்பர் 30.

01-187

---

ச. வ. பி. 21/ 1978 (X) (அ)

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பட்டமளிக்கும் நிறுவகம் ஒன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PV 62877 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் (2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதிய

2164/54 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆந் திகதிய 2053/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அதன் நிரல் I இல் காணப்படுகின்ற மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "ஆங்கிலத்தில் கௌரவ கல்வி இளமாணி" என்னும் பதிவையும் அதன் சுருக்கீடுகளையும் உடனடுத்துப் பின்னர் இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-

### அட்டவணை I

நிபந்தனைகள்

1. மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான குறைந்தபட்ச நுழைவுத் தகைமையானது, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் உயிரியல் விஞ்ஞான துறையில் அல்லது உயிர் முறைமைத் தொழில்நுட்பத் துறையில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமையாகவிருத்தல் வேண்டும்.

2. இக்கட்டளை வெளியீட்டுத் திகதியிலிருந்து ஒவ்வொரு ஐந்தாவது (05) ஆண்டிலும் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை அளிப்பதற்கு குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் பாட மீள் மீளாய்வு ஒன்று நடாத்தப்படுதல் வேண்டும்.

### அட்டவணை II

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| உயிர் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (உயிர் தொழில்நுட்பம்) |

பேராசிரியர் **ஜீ. எல். பீரிஸ்**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2020, திசெம்பர் 30.

01-188